தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

19.11.2012 P.M

20.11.2012 A.M

**கரும்புக்கான ஆதார விலை டன்னுக்கு ரூ.2,350 ஆக உயர்வு : முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**



கரும்புக்கான ஆதார விலையை டன்னுக்கு ரூ.2,350-ஆக உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். கடந்த ஆண்டு டன்னுக்கு ரூ.2,100 என்ற அளவில் மாநில பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

வேளாண்மைத் துறையில் உயரிய வளர்ச்சி ஏற்பட்டால்தான் விவசாயிகளின் வாழ்வு செழிப்படையும் என்பதைக் கருத்தில் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், திருந்திய நெல் சாகுபடித் திட்டத்தின்கீழ், சாகுபடி பரப்பை அதிகரித்தல், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றில் பயில் மேலாண்மையைக் கடைப்பிடித்தல், துல்லிய பண்ணையம் முறையில் காய்கறிகளைப் பயிரிடுதல், தோட்டக்கலை பயிர்களுக்கான அடர் நடவு என பல புதிய முன்னோடித் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

நுண்ணீர்ப் பாசனத்தைப் பெருக்கும் வகையில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாய விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், அந்தப் பொருள்களை பாதுகாப்பாக வைக்க ஏதுவாக கிடங்குகள் மற்றும் குளிர்பதன வசதியுடன்கூடிய கிடங்குகள் ஆகியவற்றை கட்டும் பணிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேலும், விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும் போதெல்லாம், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் ஆதார விலையை தமிழக அரசு வழங்கி வருகிறது.

கரும்பு டன்னுக்கு ரூ.650: கரீப் பருவத்துக்கான நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு அண்மையில் நிர்ணயம் செய்தபோது, குவிண்டாலுக்கு சாதாரண நெல்லுக்கு மத்திய அரசு வழங்கியதைவிட கூடுதலாக ரூ.50-ம், சன்னரக நெல்லுக்கு கூடுதலாக ரூ.70-ம் எனது தலைமையிலான அரசால் நிர்ணயம் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு கரும்புக்கான நியாயமான ஆதார விலையை மத்திய அரசு மெட்ரிக் டன்னுக்கு ரூ.1,450 என நிர்ணயம் செய்தபோது, தமிழக கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துச் செலவு ரூ.100 உள்பட மெட்ரிக் டன்னுக்கு ரூ.2,100 என மாநில பரிந்துரை விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்தது.

இப்போது நடப்பு (2012-2013) கரும்பு பருவத்துக்கு, நியாயமான ஆதார விலையாக மெட்ரிக் டன்னுக்கு ரூ.1,700 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. மாநில பரிந்துரை விலையாக போக்குவரத்துச் செலவு ரூ.100 உள்பட மெட்ரிக் டன்னுக்கு ரூ.2,350 என நிர்ணயம் செய்ய உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் ஜெயலலிதா தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கரும்புக்கு ஆதார விலையை நிர்ணயிப்பது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை காலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, கரும்பு டன்னுக்கு ரூ.2,350 ஆக நிர்ணயித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## பருவ மாற்றமும் "பஞ்ச' மிரட்டலும்

ஓய்வுபெற்ற தாசில்தார் நண்பர், ""ரேஷன் கடையிலே போய் அரிசி வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்றார்.

""விலையில்லா அரிசியா? நல்ல தரமாக இருக்கா? சாப்பிடப் பிடிக்கிறதா?" என்று கேட்டேன்.

""தரம் எப்படியிருந்தாலென்ன? வீட்டிலே நாலு நாய் வளர்க்கிறேனல்லவா, அவற்றுக்குச் சமைத்துப் போடத்தான் இந்த அரிசி! நாங்கள் சாப்பிட வெளிச்சந்தையில் நல்ல அரிசியாகப் பார்த்து வாங்குகிறோம்" என்றார் அவர்!

நம் நாட்டின் விடுதலைக்குப்பின் பெரிய அளவில் உணவுப் பஞ்சம் ஏதும் ஏற்படவில்லை. எனினும், நாட்டில் அரை வயிற்றுக்கு மட்டுமே உணவு கிடைக்கப் பெறுகிறவர்களின் எண்ணிக்கை கணிசமானது. ஆண்டுதோறும் அந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. அவர்களுக்கு உரிய தானியம் வளர்ப்பு நாய்களுக்குப் போய்ச் சேருகிறது! கிராமப்புற மக்களில் 87 சதவீதம் பேர் உயிர் வாழத் தேவையான குறைந்தபட்ச ஊட்டச்சத்துள்ள உணவைக்கூடப் பெறுவதில்லை.

வயல்களின் உற்பத்தித்திறன் குறைந்துகொண்டே போகிறது. பெருமளவில் தானியங்கள் கால்நடைகளுக்கும் வளர்ப்புப் பறவைகளுக்குமான தீவனமாக மாற்றப்படுகின்றன. ஏற்றுமதி செய்யக்கூடிய உயர் ரகத் தானியங்களையும் பணப் பயிர்களையும் பயிரிட அரசு ஊக்குவிக்கிறது.

மனிதருக்கான உணவு தானியங்களின் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இது போதாதென்று எரியன் உற்பத்தி செய்வதற்கு நீர்ப்பாசன வசதியுள்ள நஞ்சை நிலங்களில் காட்டாமணக்கைப் பயிரிட அரசு திட்டமிடுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வேறு பயிர் நிலங்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. முன்னுரிமைகள் தவறாகக் கணிக்கப்படுகின்றன.

தாராளமயமாக்கல் கொள்கைகளின் காரணமாக விவசாயத் துறையில் முதலீடுகள் குறைந்து வருகின்றன. விவசாயத் தொழிலாளர்களில் 65 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உள்ளிடு பொருள்களின் செலவு கூடியிருப்பதும் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காததும், பயிர்கள் அல்லது கால்நடைகளுக்கு உருப்படியான காப்பீட்டுத் திட்டங்கள் வகுக்கப்படாததும் விவசாயத்துறையைக் கடும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன. விவசாயக் கடன்களைப் பெறுவதிலும் பல இடர்ப்பாடுகள் உள்ளன.

நிகர உணவு உற்பத்தி அதிகரித்திருந்தாலும் மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தனிநபர் பெறும் உணவு அளவு குறைந்துள்ளது. 1965-ஆம் ஆண்டு வரை தனிநபருக்கு ஆண்டுக்கு 140 கிலோ முதல் 170 கிலோ வரை உணவு கிடைத்தது. 1979 முதல் 1994 வரையான காலத்தில் அது 180 கிலோவாக உயர்ந்தது. அதன் பின்னர், அது 150 கிலோவாகக் குறைந்துள்ளது. உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலான இடைவெளி கூடிக்கொண்டே போகிறது.

உணவுச் சூழ்நிலை, பருவநிலை மாற்றங்களாலும் வளிமண்டல வெப்பநிலை உயர்வாலும் மேலும் சீரழியும் என்ற அச்சம் தோன்றியிருக்கிறது. அதை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பது யாருக்குமே தெரியவில்லை. நிகழ் ஆண்டில் பருவ மழை ஆடிய கண்ணாமூச்சி ஆட்டம் வருங்காலத்தில் நிகழப்போகிற பேராபத்துகளைக் கோடி காட்டி எச்சரிப்பதாக உள்ளது.

தெற்கு ஆசியாவின் விவசாயப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும் என ஊக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. வளிமண்டலத்தின் வெப்பநிலை உயர்ந்தால் பயிரிடும் பருவம் குறையும். விவசாய உற்பத்தி 40 சதவீதம் வரை வீழ்ச்சியடையலாம் என்று நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். பருவநிலை மாற்றம் மற்றும் வளிமண்டல வெப்பநிலை ஆகியவற்றின் தீய தாக்கங்களின் பெரும் பங்கு மழைநீரின் தயவில் விவசாயம் செய்யும் பிரதேசங்களின் தலையில்தான் வந்து விடியப் போகிறது.

எதிர்காலத்தில் விவசாயத்துக்கு ஏற்படப்போகிற சோதனைகளையும் அவற்றின் காரணங்களையும் விளங்கிக்கொள்ள விவசாயிகளுக்கு மட்டுமன்றி ஆட்சியாளர்களுக்கும் திட்ட அலுவலர்களுக்கும், ஊராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகிகளுக்கும், வங்கித் துறையினருக்கும் வர்த்தகக் குழும நிர்வாகிகளுக்கும் கூடப் பயிற்சியளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடித்து வந்த விவசாயக் கால அட்டவணைகளும் பயிர்ச் சுழற்சி முறைகளும் நிலைகுலைந்து வருகின்றன. எதிர்பாராத விதத்தில் எதிர்ப்படும் மாற்றங்களையும் பிரச்னைகளையும் உய்த்துணர்ந்து அவற்றுக்கேற்பத் தமது விவசாயம் மற்றும் தொழில் உத்திகளை மாற்றியமைத்துக்கொள்ள அவர்களுக்குப் போதனைகளும் உந்தல்களும் ஊக்குவிப்புகளும் தேவைப்படுகின்றன.

"பாட்ஸ்டாம்' வானிலைத் தாக்க ஆய்வுக் கழகம், இந்தியா எதிர்வரும் 200 ஆண்டுகளில் வளிமண்டல வெப்பநிலையில் ஏற்படக்கூடிய உயர்வு காரணமாக அதன் பருவமழை அமைப்பில் அதிக எண்ணிக்கையிலும் அதிகக் கடுமையுடனும் ஏற்படுகிற பொய்ப்புகளால் பெரிதும் பாதிக்கப்படலாம் என எச்சரிக்கிறது.

இந்தியாவின் உயிர்நாடியான விவசாயம் பெருமளவில் பருவமழை சார்ந்ததாயிருப்பது காரணமாக இந்த ஆய்வுக் கழகத்தின் முன்னறிவிப்புகள் கவலையளிக்கின்றன. அவை ஊகிக்கிறபடி 40 - 70 சதவீத மழைக் குறைவு இந்தியாவின் பொருளாதாரத்தைப் பெருமளவு பாதிக்கும் வகையிலிருக்கும்.

தென்மேற்குப் பருவத்தில் இந்தியாவின் மழையில் 70 சதவீதத்துக்கு மேல் பெய்கிறது. அது ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்துவிடுகிறது. 21-ஆம் நூற்றாண்டு இறுதி முதல் 22-ஆம் நூற்றாண்டின் முதல் பாதி வரையான காலத்தில் வளி மண்டல வெப்பநிலை உயர்வும், வசந்த காலத்தில் பசிபிக் கடலில் ஏற்படும் வெப்பச் சலனக் காற்றுச் சுழற்சியும் பருவ மழைப் பாங்கில் அதிக எண்ணிக்கையிலும் கூடுதலான கடுமை கொண்டவையுமான மாற்றங்களை ஏற்படுத்தும் என "சுற்றுச்சூழல் ஆய்வுக் கடிதங்கள்' என்ற இதழில் வெளியான ஒரு கட்டுரை பயமுறுத்துகிறது.

பசிபிக் வெப்பச்சலனக் காற்றுச் சுழற்சிகள் "வாக்கர் சுழல்கள்' எனப் பெயரிடப்பட்டுள்ளன. அவை இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பகுதிகளில் உயர் காற்றழுத்த மண்டலங்களை உருவாக்குகின்றன. ஆனால், "எல் நினோ' விளைவு உண்டாகும் ஆண்டுகளில் இந்த உயர் காற்றழுத்த மண்டலங்கள் இந்தியப் பெருங்கடலின் கிழக்குப் பகுதிகளில் உருவாக முனைகின்றன. அதன் காரணமாக இந்தியப் பரப்பின் மேல் வானில் காற்றழுத்தம் உயர்ந்து பருவ மழை பலவீனப்படத் தொடங்கும். குறிப்பாகப் பருவ மழைக்காலம் தொடங்குகிற வசந்த காலத்தில் இந்தச் செயல்பாடு நிகழ்கிறது.

மழைநீர் சேகரிப்பு, நீர்ப்பாசனச் சிக்கனம் போன்ற நடவடிக்கைகளுடன் மக்கள் தம் உணவுப்பழக்கங்களையும் மாற்றிக்கொண்டு காய்கறிகள், கீரைகள், புலால், மீன் போன்ற உணவுகளையும் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். விலையிலா அரிசிக்குப் பதிலாகப் புஞ்சைத் தானியங்களைக் கிராமப் புறங்களிலாவது வழங்க வேண்டும்.

இயற்கை உரங்களும், தொழு உரங்களும் தழை உரங்களும் நிலத்தின் ஊட்டச்சத்துச் செறிவையும், நீர் பிடிப்புத் திறனையும் அதிகரிக்க உதவும். அவற்றை அதிக அளவில் பெறத் தழைத் தாவரங்களை வரப்புகளில் வளர்க்க வேண்டும்.

நீர் நிலைகளில் பரவி இடைஞ்சல் செய்யும் ஆகாயத் தாமரையை நல்ல தழை உரமாக மாற்ற முடியும். அதைக் காயவைத்து எரியனாகப் பயன்படுத்தலாம். சாண எரிவாயுக் கலங்களிலும் அதைப் பயன்படுத்தி எரிவாயு உற்பத்தி செய்ய முடியும். அதிலிருந்து காகிதம்கூடத் தயாரிக்கலாம்.

மலைச்சரிவுகளில் பெய்யும் மழை வேகமாகக் கீழே ஓடி நில அரிப்பையும் நிலச்சரிவுகளையும் ஏற்படுத்துவதைத் தவிர்க்க அதன் பாதைகளைத் திருப்பி விடும் வகையில் தடுப்பணைகளையும் வரப்புகளையும் அமைக்க வேண்டும். அதன் மூலம் நீர் மண்ணுக்குள் இறங்கி நிலத்தடித் தேக்கங்களை நிரப்பும். மலைச்சரிவுகளில் படிக்கட்டு வடிவ வயல்களை அமைத்துப் பயிரிடலாம்.

இந்தப் பணிகளுக்கெல்லாம் பெரிய அறிவியல் படிப்புகளும் நவீனத் தொழில்நுட்பச் சாதனங்களும் தேவையில்லை. இந்தியர்கள் ஐயாயிரம் ஆண்டுகள் அனுபவமுள்ள விவசாயிகள். தம் பட்டறிவின் மூலம் பல சிறந்த சாதனங்களையும் பயிர் வளர்ப்பு முறைகளையும் புதுப்புனைவு செய்து பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். மறந்துபோன அல்லது மறைந்துபோன உத்திகளை மீட்டெடுத்துப் பயன்படுத்துவது கடினமல்ல. ஆனால், வளிமண்டல வெப்பநிலை உயர்வையும் அதன் காரணமாகத் தோன்றும் பருவ கால மாற்றங்களையும் யாரும் எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை.

முற்காலத்தில் மன்னர்களும் மக்களும் நெடுநோக்குடன் செயல்பட்டுக் குளங்களையும் ஏரிகளையும் நிர்மாணித்து வைத்தார்கள். இன்று குறுகிய நோக்குடன் செயல்பட்டு அரசும் மக்களும் அவற்றைக் குடியிருப்புப் பகுதிகளாக மாற்றி வருகின்றனர்.

தொழிற்புரட்சிக்குப் பின்தான் வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் செறிவு அதிகரித்து வளிமண்டல வெப்பநிலை உயர்வுக்கு வழிகோலியது. அறியாமை காரணமாக அஜாக்கிரதையாகக் கையாளப்பட்ட "குளோரோ-புளோரோ கார்பன்' வாயுக்கள் 40 ஆண்டுக்காலம் மேல்நோக்கிப் பயணம் செய்து இன்று "ஓசோன்' படலத்தில் ஓட்டை போடுகின்றன.

இவ்வாறு மனிதன் நீண்டகாலமாகச் செய்துவரும் தவறுகளே இன்றையச் சிக்கல்களுக்குக் காரணம். அவற்றை நிவர்த்திக்கவும் நீண்ட காலம் பிடிக்கும். எனினும், அதற்கான முதல் அடிகளை இன்றே எடுத்து வைக்க வேண்டும்.

## முடிவுக்கு வந்தது வாழைப்பழச் சண்டை

ஒரு வாழைப்பழத்துக்குப் போய் இவ்வளவு பெரிய சண்டையா..." என்ற கேள்வியும், ""வாழைப் பழம் என்ன...? சாதாரண விஷயமா" என்று கூறி நீண்ட விளக்கம் அளிக்கும் பதிலும் திரைப்படத்தில் வரும் பிரபலமான நகைச்சுவைக் காட்சி.

அதே நேரத்தில், வாழைப் பழம் என்பது சாதாரண விஷயம் இல்லைதான் என்பதை ஐரோப்பிய யூனியனுக்கும், லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் இடையே சுமார் 20 ஆண்டுகளாக நீடித்து வந்த வாழைப்பழ வர்த்தகச் சண்டை உணர்த்தியுள்ளது.

ஐரோப்பிய யூனியனுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாழைப் பழத்துக்கு விதிக்கப்படும் சுங்க வரிதான் இங்கு சண்டைக்கு மூலகாரணம்.

வாழைச் சாகுபடியில் உலகில் முன்னணியில் இருப்பது ஈக்வடார், குவாதமாலா, ஹோண்டுராஸ், மெக்சிகோ, கொலம்பியா, பெரு, வெனிசூலா. பிரேசில், பனாமா உள்ளிட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள். அதே நேரத்தில் வாழைப்பழ நுகர்வில் முன்னணியில் இருப்பவை ஐரோப்பிய யூனியன் நாடுகள். அங்கு வாழைப்பழத்துக்கு மிகப் பெரிய சந்தை உண்டு. லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஏழை விவசாயிகளால் சாகுபடி செய்யப்படும் வாழைப் பழங்கள்தான், ஐரோப்பியச் சீமான்களுக்கு விருந்தளிக்கப்படுகிறது.

வாழைப் பழத்தை பெருமளவில் உற்பத்தி செய்யும் நாடுகள் அனைத்தும் ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் அதனை அதிக அளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன. குளிர் பிரதேசத்தில் வாழையைச் சாகுபடி செய்ய முடியாது என்பதால் வாழைப் பழத் தேவைக்கு ஐரோப்பிய நாடுகள் இறக்குமதியை நம்பியுள்ளன.

இதனிடையே ஆப்பிரிக்கா, கரிபீயன், பசிபிக் பிரதேசப் பகுதிகளில் (ஏசிபி நாடுகள்) தங்களிடம் அடிமைப்பட்டு இருந்த நாடுகளில் இருந்து வாழைப்பழ இறக்குமதி செய்யும்போது அவற்றுக்குச் சலுகை அளித்தன ஐரோப்பிய நாடுகள். அதாவது, தங்களின் காலனி நாடாக முன்பு இருந்தவற்றுக்கு வாழைப்பழ இறக்குமதியின்போது சுங்க வரி கிடையாது என்று அறிவித்தன.

அதே நேரத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகள் இறக்குமதி செய்யும் வாழைப் பழத்துக்கு சுங்க வரி விதிக்கப்பட்டு வந்தது. இதனால் லத்தீன் அமெரிக்க நாடுகள் பாதிக்கப்பட பிரச்னை தொடங்கியது.

தடையற்ற வாணிப ஒப்பந்தத்தின்படி இறக்குமதி செய்யும் வாழைப் பழத்துக்கு சுங்கவரி வசூலிப்பது நியாயமற்றது என்று போர்க்கொடி தூக்கின அந்நாடுகள். ஐரோப்பிய நாடுகள் இதனைக் கண்டுகொள்ளாததை அடுத்து பிரச்னை உலக வர்த்தக அமைப்புக்கு (டபிள்யூ.டி.ஓ) எடுத்துச் செல்லப்பட்டது. இதனையடுத்து பலகட்டங்களில் பேச்சு நடைபெற்றும் இறுதி முடிவு எட்டப்படாமலேயே இருந்தது.

ஐரோப்பிய நாடுகள் ஆண்டுக்கு சராசரியாக ஐந்தரை கோடி டன் வாழைப் பழத்தை இறக்குமதி செய்கின்றன. இதில் 70 சதவீதம் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து வருகிறது. 17 சதவீதம் "ஏசிபி' நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

ஸ்பெயின், போர்ச்சுகல், சைப்ரஸ், கிரேக்கம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் ஒரு சில இடங்களில் வாழைச் சாகுபடியாகிறது. ஆனால், இவற்றின் மூலம் 10 சதவீதத் தேவையை மட்டுமே நிறைவு செய்ய முடிகிறது.

வாழைப்பழ வர்த்தகம் தொடர்பாக பிரச்னை ஒருபுறம் இருந்தாலும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதை ஐரோப்பாவால் நிறுத்திக் கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளாலும் ஏற்றுமதி செய்யாமல் இருக்க முடியவில்லை.

ஏனெனில் ஐரோப்பாவுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் வாழை ஏற்றுமதி பெரும் வருவாய் ஈட்டித் தருவதாக உள்ளது. முக்கியமாக ஈக்வடாரில் எண்ணெய்க்கு அடுத்தபடியாக, அதிக பணம் ஈட்டித் தருவது வாழைப்பழ ஏற்றுமதிதான்.

இதனிடையே உலக வர்த்தக அமைப்பின் மத்தியஸ்தத்தின்படி, ஐரோப்பிய யூனியனும், 10 லத்தீன் அமெரிக்க நாடுகளும் வாழைப்பழ வர்த்தகம் தொடர்பாக பிரச்னைகளைத் தீர்க்க 8 ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. இதனை வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு என்று உலக வர்த்தக அமைப்பு வர்ணித்துள்ளது.

இந்த ஒப்பந்தங்களின்படி அடுத்த 8 ஆண்டுகளில் வாழைப் பழத்துக்கான சுங்க வரியை படிப்படியாக குறைத்துக்கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் வாழைப் பழச் சண்டைக்கு தாற்காலிகத் தீர்வு காணப்பட்டுள்ளது.

வாழைப்பழ வர்த்தகத்தில் 20 ஆண்டுகள் பிரச்னை நீடித்துள்ளது என்றால், நமது உள்நாட்டுச் சந்தையை அன்னியர்களுக்குத் திறந்து விடுவதன் மூலம் இனி எந்தெந்த பிரச்னைகளை இந்தியா எதிர்கொள்ளப் போகிறதோ என்ற கவலையும் எழுகிறது.

இந்தியாவில் விவசாயம் இப்போது புறக்கணிக்கப்படும் தொழிலாக மாறிவருகிறது. இதனை மாற்ற முயற்சிக்காமல், அன்னிய நேரடி முதலீடு என்ற பெயரில் நமது விவசாயிகளைப் பன்னாட்டு நிறுவனங்கள் குத்தகைக்கு எடுத்து நடத்தும் நிலை வந்தால், சுண்டைக்காய், வாழைக்காய் போன்றவையும் மலையான பிரச்னையாக மாறி அச்சுறுத்தும் என்ற அச்சம் எழுகிறது. அடிப்படைத் தேவைகளான உணவுக்கும், தண்ணீருக்கும் அன்னியர் முன்பு மண்டியிடும் சூழ்நிலை வந்துவிடக் கூடாது.

19th nov 2012 P.M

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

கூட்டுறவு வார விழாவின் ஒரு பகுதியாக காஞ்சிபுரம் அருகே இலவச கால்நடை மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கடந்த நவம்பர் 14-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. கூட்டுறவு வாரவிழாவின் ஒரு பகுதியாக காஞ்சிபுரம் அருகே இளநகர் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. ஆடு, கறவை மாடுகள் என சுமார் 1,300 கால்நடைகள் இந்த முகாம் மூலம் பயன்பெற்றன. முகாமின் போது பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு இலவசமாக செயற்கை கருவூட்டல் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்ச்சியின்போது கால்நடைகளின் வளர்ப்பு மற்றும் பராமரிக்க வேண்டிய முறைகள் குறித்து கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் எஸ். கோவர்த்தனன் விவசாயிகளிடம் எடுத்துரைத்தார்.

விலையில்லா கறவைப்பசுக்கள் வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவம், இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பால் உற்பத்தி பெருக்கம், இதன் மூலம் பயனீட்டாளர்கள் பெற்றுள்ள பயன்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் நலன் குறித்து காஞ்சிபுரம் சரக பால்வளத் துணைப்பதிவாளர் ராதாகிருஷ்ணன் பேசினார்.

நிகழ்ச்சியில் கூட்டுறவு சார்பதிவாளர் (பால்வளம்) ராமன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் திருப்பூர் மாவட்டம் முன்னோடி : ஆட்சியர் தகவல்

உழவர் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் திருப்பூர் மாவட்டம் முன்னோடியாகத் திகழ்வதாக மாவட்ட ஆட்சியர் ஜி. கோவிந்தராஜ் தெரிவித்தார்.

தாராபுரம் அரிமா அரங்கில் அரசின் நலத்திட்ட உதவி வழங்கும் விழா ஆட்சியர் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி. ராமலிங்கம் கலந்துகொண்டு 477 பயனாளிகளுக்கு ரூ. 54 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் ஜி. கோவிந்தராஜ் பேசியது:

மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் அரசின் திட்டங்கள் முறையாகவும்

முழுமையாகவும் சென்றடைய வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். இதன் அடிப்படையில் வருவாய்த் துறை மூலம் சமூகநலத் துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக திருப்பூர் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் முன்னோடி மாவட்டமாக உள்ளது. கிராம மக்கள் வேலைவாய்ப்பின்றி கஷ்டப்படக் கூடாது என்பதற்காகவே தமிழக முதல்வர் விலையில்லா ஆடு மற்றும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அரசின் திட்டங்களை மக்கள் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றார்.

எம்.எல்.ஏ. கே.பொன்னுசாமி, கோட்டாட்சியர் இரா. அழகுமீனா, வட்டாட்சியர் சே.சென்னியப்பன், திட்ட அமலாக்க தனித்துறை வட்டாட்சியர் ச. முருகதாஸ், ஊராட்சி ஒன்றியத் தலைவர் பி. ரமேஷ் உள்ளிட்ட பலர் விழாவில் பங்கேற்றனர்.

## கொட்டும் பனி : கருகும் தேயிலைச் செடிகள் ! விவசாயிகள் கவலை

கோத்தகிரியில் கொட்டும் கடும் பனியால், பசுந்தேயிலைச் செடிகள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் 90 சதவீத மக்கள் தேயிலை விவசாயத்தையே நம்பி உள்ளனர். இங்கு சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர். நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், தேயிலை மகசூல் மிகக் குறைவாகவே இருந்தது.

தற்போது வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்ததால், மீண்டும் தேயிலைச் செடிகள் துளிர்விட ஆரம்பித்தன. இதனால் மகசூல் அதிக அளவில் கிடைக்கக் கூடும் என எதிர்பார்த்த விவசாயிகளுக்கு, அதிர்ச்சி அளிக்கும் விதமாக தற்போது கடும் பனி பொழிய ஆரம்பித்துள்ளது.

கடந்த ஒருவாரமாக பனியின் தாக்கம் அதிகரித்துள்ளது. பகலில் கடும் வெயிலும், மாலையில் கடும் பனி பொழிவதால், தேயிலைச் செடிகள் கருகத் துவங்கியுள்ளன.

இதனால் பசுந்தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டதால், விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்.

## தீயில் கருகி கரும்புப் பயிர்கள் நாசம்

பள்ளிப்பாளையம் அருகே கரும்புக் காட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் ரூ.50 ஆயிரம் மதிப்பிலான கரும்புப் பயிர்கள் தீயில் எரிந்து சேதமடைந்தன.

நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் அருகேயுள்ள காடச்சநல்லூர் பொம்மன்காட்டைச் சேர்ந்த பழனிச்சாமியின் மகன் ராஜேந்திரன். இவருக்கு அந்தப் பகுதியில் 4 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்தில் கரும்பு பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்தது. இதில், குறிப்பிட்ட அளவில் கரும்பு வெட்டப்பட்டும் இருந்தன.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கரும்புத் தோட்டத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில், அறுவடைக்குத் தயாராக இருந்த கரும்பு பயிர்கள் தீயில் கருகி சேதமடைந்தன.
தகவலறிந்து விரைந்து வந்த திருச்செங்கோடு தீயணைப்புப் படை வீரர்கள் சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும், ரூ.50 ஆயிரம் மதிப்பிலான கரும்பு தீயில் எரிந்து சேதமடைந்ததாக தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.
தீ விபத்துக்கான காரணம் குறித்து பள்ளிப்பாளையம் போலீஸôர் விசாரிக்கின்றனர்.

## தரமான விதைகளை உற்பத்தி செய்ய பயிற்சி

தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வது தொடர்பாக திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் வட்டார விதைப் பண்ணை விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமை அட்மா திட்டத்தின் நாமக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் (பொறுப்பு) ப.முரளிதரன் தொடக்கிவைத்தார்.
அப்போது அவர் பேசுகையில், விதைப்பண்ணை விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதையைத்தான் சக விவசாயிகளும் வாங்கி விதைக்கின்றனர். எனவே, விதைப்பண்ணை விவசாயிகள் தரமான விதையினை உற்பத்தி செய்து வழங்கிட வேண்டும் என்றார்.
விதைச் சான்று உதவி இயக்குநர் ஆர்.சுப்பிரமணியம், சான்று விதையின் முக்கியத்துவம், விதைப்பண்ணை அமைக்கும் போது விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் குறித்தும், அங்ககச் சான்றளிப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். அத்துடன், கருவிதை, வல்லுநர் விதை, ஆதார விதை மற்றும் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்படுவது குறித்தும் எடுத்துரைத்தார்.
நடமாடும் மண் ஆய்வுக்கூட அலுவலர் டி.தண்டபாணி, தோட்டக் கலை உதவி இயக்குநர் எஸ்.மாலதி, வேளாண் அலுவலர் மணிமேகலை, ராசிபுரம் விதைச் சான்று அலுவலர் கந்தசாமி உள்ளிட்டோரும் பயிற்சி அளித்தனர். முன்னதாக திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் சி.நமச்சிவாயம் வரவேற்றார். நாமக்கல் விதைச் சான்று அலுவலர் முருகேசன், உதவி அலுவலர்கள் ராமசாமி, அருள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி

நாமக்கல்லில் புதன்கிழமை (நவ.21) நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
இதுகுறித்து கோழிகளுக்கான மரபு சார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மைய தலைவர் மோகன்

வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாமக்கல் - திருச்சி சாலை கால்நடை மருத்துவமனை வளாகத்திலுள்ள கோழிகளுக்கான மரபு சார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், புதன்கிழமை (நவ.21) "நாட்டுக் கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும்' என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. பயிற்சியில் பங்கேற்க விரும்பும் கோழிப் பண்ணையாளர்கள், பண்ணை அமைக்க விரும்பும் தொழில் முனைவோர் செவ்வாய்க்கிழமை மாலைக்குள் நேரிலோ அல்லது 04286 233230 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மா விவசாயிகளுக்கு மானியம் : இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உடனடியாக மானியம் வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை விடுத்துள்ளது.

பர்கூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை மாவட்டக் குழு உறுப்பினர் திருப்பதி தலைமையில் நடைபெற்றது. மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.கண்ணு பேசினார்.

கூட்டத்தில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் புற நோயாளிகள் அனுமதிச் சீட்டு தரும் நேரம் முடிந்த பிறகு, அவசர சிகிச்சை பெற வரும் நோயாளிகளிடம் அனுமதிச் சீட்டு வாங்கி வந்தால்தான் சிகிச்சையளிக்க முடியும் என வற்புறுத்துவதை கைவிட வேண்டும்.

பர்கூர் தோட்டக்கலைத் துறையின் மூலம் மாந்தோப்பு பராமரிக்க விண்ணப்பம் பெற்று ஓராண்டுக்கு மேலாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, விவசாயிகளுக்கு உடனடியாக மானியம் வழங்க வேண்டும் என்பன உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கரும்பு விலையை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண் டும்: வைகோ



கரும்புக்கான விலையை தமிழக அரசு உடனே அறிவிக்க வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில்,

கரும்பு சாகுபடி என்பது தமிழகத்தின் மிக முதன்மையான வணிகப் பயிராக உள்ளது. தமிழகத்தில் சுமார் 7 லட்சம் ஏக்கர் பரப்பில் - 17 மாவட்டங்களில் கரும்பு பயிரிடப் படுகின்றது. சுமார் 5 லட்சம் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமாகக் கரும்பு விவசாயம் உள்ளது.

தமிழகத்தின் கரும்பு விளைச்சல் 400 லட்சம் டன்னாக உள்ளது. இந்தியாவின் கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 10 சதவீதம் ஆகும். தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் கரும்பிலிருந்து சர்க்கரை எடுத்தது போக துணை விளைபொருளாக 400 மெகா வாட் மின்சாரமும் 24 கோடி லிட்டர் எரி சாராயமும் உற்பத்தி செய்கின்றன.

இவ்வாறு வேளாண் துறையிலும், தொழில் துறையிலும் முக்கியமாக உள்ள கரும்பை உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலை துயர மிக்கதாக உள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கரும்பின் உற்பத்தி செலவு 100 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது. குறிப்பாக உரம் 200 சதவீதம் விலை அதிகரித்துள்ளது.

2012-2013 அரவை ஆண்டு அக்டோபர் மாதமே தொடங்கிவிட்டது. இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் மாநிலப் பரிந்துரை விலையை தமிழக அரசு இன்னமும் அறிவிக்காமல் உள்ளது விவசாயிகளுக்கு மிகுந்த வேதனையாக உள்ளது.

கடந்த ஆண்டு மாநில அரசின் பரிந்துரை விலை லாரி வாடகையுடன் ஒரு டன்னுக்கு ரூ. 2,100/- ஆகும். கரும்பின் உற்பத்தி செலவு இந்த ஆண்டு 100 சதவீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்நிலையில் தமிழக அரசு 50 சதவீதமாவது விலை உயர்வு செய்து ஒரு டன் கரும்புக்கு ரூ. 3,000/- பரிந்துரை செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். தமிழகக் கரும்பு உற்பத்தியைப் பாதுகாக்கும் பொருட்டு கரும்பு உழவர்களின் நலனைக் காக்கும் வகையில் உடனடியாக கரும்பு விலையை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

20.11.2012 A.M

## முன்பருவ முனைப்பு முகாம் வேளாண் அலுவலர் பங்கேற்பு

தா.பேட்டை: வாளசிராமணியில் தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது.

முசிறி அருகேயுள்ள தா.பேட்டை யூனியன் வாளசிராமணி பஞ்சாயத்தில், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் தீவிர முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் செல்வம் வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் கனகராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) சபாநடேசன் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசன், வேளாண் பொறியியல் துறை ஜெயபால் கண்ணன், வி.ஏ.ஓ., பத்மநாபன் ஆகியோர் பங்கேற்று திட்டங்கள் குறித்து பேசினர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அசோக்குமார், செந்தில்குமார், ரவி, ரேவதி செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் மனோகரன் நன்றி கூறினார்.

## நெற்பயிரில் இலைக்கருகல் நோய் தாக்குதல் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை

வடலூர்:நெற்பயிரில் பாக்டீரியா தாக்குதலால் இலைக் கருகல் நோயை கட்டுப்படுத்துவது குறித்து குறிஞ்சிப்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

குறிஞ்சிப்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் அப்பன்ராஜ் விடுத்துள்ள் செய்திக்குறிப்பு: குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் தற்போது சம்பா பயிரிடப்பட்டுள்ள பயிரில் சில இடங்களில் பாக்டீரியா தாக்கி இலைக் கருகல் நோயின் அறிகுறிகள் காணப்படுகின்றன. நெற்பயிரின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காணப்படுவதால் விவசாயிகள் இதனை மஞ்சள் நோய் என தவறாகக் கருதுகின்றனர்.பாக்டீரியா தாக்கிய பயிரில் இலையின் நுனிப் பகுதியிலிருந்து மஞ்சள் நிற பட்டை வடிவ கோடு துவங்கி இலையின் அடி வரை பரவத் தொடங்குகிறது. இது காலை நேரத்தில் இலையில் உள்ள மஞ்சள் நிற திட்டுகளில் பாக்டீரியாவின் திரவம் வடிவதைக் காணலாம்.

பாதிக்கப்பட்ட இலைகளை குறுக்கு வாட்டில் வெட்டி ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் நிரப்பி அதில் வைத்தால் பாக்டீரியாவிலிருந்து வரும் திரவம் காரணமாக தண்ணீர் கலங்குவதைக் காணலாம்.

நோயின் பாதிப்பு அதிகமானால் இலை முழுவதும் காய்ந்து விடும். தற்போது பனிப்பொழிவு, காற்றில் அதிக ஈரப்பதம் காரணமாக நோய் அதிகம் பரவ வாய்ப்புள்ளதால், தாக்குதல் அறிகுறிகள் தென்பட்ட உடனே மருந்து தெளித்தல் வேண்டும்.ஒரு ஏக்கருக்கு காப்பர் ஆக்சி குளோரைடு 500 கிராம், ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் மற்றும் டெட்ராசைக்ளின் கலவை மருந்து 120 கிராம் கலந்து தெளிக்க வேண்டும், அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 200 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நோய் ஆரம்ப நிலையில் இருந்தால் இயற்கை நோய் விரட்டியான பசுஞ்சாண கரைசலை தெளித்து கட்டுப்படுத்தலாம். மேலும் பயிர் நன்கு நோயிலிருந்து விடுபட்ட பின்னரே தழைச் சத்தினை இடவேண்டும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## காற்றாலை இடங்களை சுற்றிதரிசாக உள்ள விளை நிலங்கள்

தேனி:காற்றாலை அமைந்துள்ள இடங்களை சுற்றிலும், விளைநிலங்கள் தரிசாக மாறிவிட்டதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்தது.விவசாயிகளின் புகார்கள் வருமாறு:

பெரியகுளம் மேல்மங்கலத்தில் வாய்க்கால் தூர்வாரி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளை, வடகிழக்கு பருவமழை துவங்கும் முன், விரைந்து முடிக்க வேண்டும். அப்போது தான் பாசனத்திற்கு நீர் திறக்க வசதியாக இருக்கும்.காற்றாலைகள் உள்ள இடங்களை சுற்றிலும், விளைநிலங்கள் தரிசாக மாற்றப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துகள் பயிரிட நடவடிக்கை எடுக்க வேண்டும். உத்தமபாளையம் முதல் சுருளி தீர்த்தம் வரை, காமயகவுண்டன்பட்டி ரோட்டில் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். பாரத ஸ்டேட் வங்கி, தேனி கிளையில் அறிவிப்பின்றி விவசாயிகள் சேமிப்பு கணக்கில், பயிர் கடனுக்காக பணம் வரவு வைக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர். துவரை பயிர் உற்பத்தியை அதிகரிக்க நாற்று நடவு செய்யும் முறையை அனைத்து விவசாயிகளும் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்,என்றனர்.குறைகளை தீர்க்க கலெக்டர் உத்தரவிட் டாரடி.ஆர்.ஓ., விஜயராணி, விவசாய இணை இயக்குனர் சுந்தரம், நேர் முக உதவியாளர் முத்தையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 2 ஆண்டுகளில் வளரக்கூடிய மரக்கன்றுகளை 3 மாதத்தில் மரமாக மாற்றிய இளைஞர்கள்

திருநெல்வேலி:செடி வைத்து நடவு செய்து 2 ஆண்டுகளில் வளரக்கூடிய மரக்கன்றுகளை விதையில்லாமல் 3 மாத்திலேயே மரமாக உருவாக்கி நெல்லையை சேர்ந்த தன்னார்வ தொண்டர்கள் சாதித்து வருகின்றனர்.

நெல்லை ராஜவல்லிபுரத்தை சேர்ந்த இளைஞர்கள் செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பை

துவக்கி மரக்கன்றுகள் வளர்த்து பசுமைப்புரட்சி ஏற்படுத்தி வருகின்றனர். விதைகள் பாவு செய்து மரக்கன்றுகளை உற்பத்தி செய்த தன்னார்வ இளைஞர்கள், மரத்தின் பெரிய கம்புகளை வெட்டி, நடவு செய்து, இயற்கை உரங்களை போட்டு 90 நாட்களிலேயே மரங்களாக உருவாக்கி புதிய சாதனையை படைத்துள்ளனர்.

செப்பறை வல பூமி பசுமை உலகம் அமைப்பை சேர்ந்த இளைஞர்கள் அர்ஜூனன், ராஜூ, சின்னத்தம்பி, ரவிக்குமார், சங்கர் உள்ளிட்ட இளைஞர்கள் நேற்று நெல்லை கலெக்டர் செல்வராஜை சந்திந்து மனு அளித்தனர். அந்த மனுவில், "விதைகளை பாவு செய்து மரக்கன்றுகளை உருவாக்கி, அதை மரங்களாக மாற்ற 2 முதல் 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் மரங்களில் உள்ள கிளைகளின் கம்புகளை வெட்டி, இயற்கை உரத்தை போட்டு, 3 மாதங்களில் அவற்றை மரங்களாக மாற்றும் புதிய முறையை ராஜவல்லிபுரத்தில் செயல்படுத்தியுள்ளோம். நவீன காலத்தில் நமது வசதிக்கேற்ப இந்த முறையில் மரங்களை குறுகிய காலத்தில் வளர்க்க முடியும். மரம் வளர்ப்பதால் பசுமைப்புரட்சியும், மழை வளமும் ஏற்படும். இந்த புதிய முறையால் ஒவ்வொரு கிராமத்தையும் 2 ஆண்டுகளில் பசுமையாக்க முடியும். இந்த புதிய முயற்சியை மத்திய, மாநில அரசுகளுக்கு தெரியப்படுத்தவும், பசுமைப்புரட்சி ஏற்படுத்தவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மானிய உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து தரவேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.இதுகுறித்து செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பை சேர்ந்த அர்ஜூனன் கூறுகையில், "எங்கள் அமைப்பு சார்பில் விதைகளை போட்டு மரக்கன்றுகளை உருவாக்கி அதை மக்களுக்கு இலவசமாக வழங்கிவந்தோம். ராஜவல்லிபுரம், தாழையூத்து பகுதியில் 27 ஆயிரம் மரக்கன்றுகளை வழங்கியுள்ளோம். ராஜவல்லிபுரத்தில் மரக்கன்றுகளை வளர்த்து பசுமை புரட்சி ஏற்படுத்தியுள்ளோம்.மரத்தின் கம்புகளை வெட்டி, இயற்கை உரங்களை போட்டு, மரங்களாக உருவாக்கும் புதிய முயற்சியை செய்தோம். விதை போட்டு 2 முதல் 3 ஆண்டுகளில் வளரக்கூடிய மரக்கன்றுகள், புதிய முறையில் 90 நாட்களிலேயே மரமாக வளர்ந்து பலனை தந்துள்ளது. இந்த முறைக்கு பணம் அதிகம் செலவாகது. தண்ணீரும் குறைவாக தான் செலவாகும். இந்த புதிய முறையில் வேம்பு, மா, அத்தி, அரசு, பூவரசு போன்ற மரங்கள் வளர்ந்துள்ளன. எங்களது முயற்சிக்கு பாலாமடை அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முகம்மதுகனி வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறார். நெல்லை மாவட்ட நிர்வாகம் உதவினால் அனைத்து கிராமங்களிலும் எங்களது புதிய முயற்சியை பயன்படுத்தி மரங்களை வளர்க்கவும், பசுமை புரட்சி ஏற்படுத்தவும் பாடுபடுவோம். மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு பதிலாக, மரத்தின் கம்புகளை வெட்டி அதை மரமாக மாற்றும் திட்டத்தையும் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தவேண்டும். இதற்கான பயிற்சியை அளிக்கவும் எங்கள் அமைப்பு தயராக உள்ளது.

இவ்வாறு அர்ஜுனன் கூறினார்.கலெக்டரிடம் மனு அளித்த செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பை சேர்ந்த இளைஞர்கள், மரக்கம்புகளால் 90 நாட்களில் உருவாக்கிய மரக்கன்றுகளையும் எடுத்துவந்து கலெக்டரிடம் காட்டினர். இந்த புதிய முயற்சியை அதிகாரிகளும், கலெக்டர் அலுவலகத்திற்கு வந்திருந்தவர்களும் பாராட்டினர்.

**துவரை நடவு செயல்விளக்க திடல்வேளாண் அதிகாரி ஆய்வு**

கடையநல்லூர்:கடையநல்லூர் வட்டாரத்தில் துவரை நடவு செயல்விளக்க திடலை வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.கடையநல்லூர் வட்டாரம் சின்னபனையன்குளம் கிராமத்தில் வேளாண்மை இணை இயக்குனர் சவுந்திரராஜன் துவரை நாற்று நடவு முறை செய்ய விளக்க திடலை தலைமை வகித்து துவக்கி வைத்தார். கடையநல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள், துவரை நாற்றங்கால் அமைப்பது குறித்தும், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், மானியமாக துவரை நாற்றங்கால் அமைத்து நடவு செய்யும் செயல்விளக்க திடலுக்கு 5 ஆயிரம் ரூபாய் ஹெக்டேருக்கு வழங்கப்படுவது குறித்தும் கூறினார்.செயல் விளக்கத்தின் போது வேளாண்மை உதவி இயக்குனர் பெருமாள், வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், துணை வேளாண்மை அலுவலர் லெட்சுமிநாராயணன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர். மேலும் நயினாரகரத்தில் திருந்திய நெல் சாகுபடி இயந்திர நடவு திடலை வேளாண்மை இணை இயக்குனர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.உதவி வேளாண்மை அலுவலர் அண்ணாதுரை நன்றி கூறினார்.

# தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

19.11.2012 P.M

20.11.2012 A.M

## கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,350 வழங்கப்படும்



சென்னை : கரும்பு 2012,13ம் ஆண்டிற்கான ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.2,100ல் இருந்து ரூ.2,350ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். இது குறித்து முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கை: நுண்ணீர் பாசனத்தை பெருக்கும் வகையில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், அந்த பொருட்களை பாதுகாப்பாக வைக்க ஏதுவாக கிடங்குகள் மற்றும் குளிர்பதன வசதியுடன் கூடிய கிடங்குகள் ஆகியவற்றை கட்டும் பணிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மேலும், வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும் போதெல்லாம், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் ஆதார விலையை அரசு வழங்கி வருகிறது. காரீப் பருவத்திற்கான நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு சமீபத்தில் நிர்ணயம் செய்தபோது, குவிண்டால் ஒன்றுக்கு சாதாரண நெல்லுக்கு மத்திய அரசு வழங்கியதைவிட கூடுதலாக 50 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு கூடுதலாக 70

ரூபாயும் அரசால் நிர்ணயம் செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு கரும்புக்கான நியாயமான ஆதாய விலையை மத்திய அரசு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.1,450 என நிர்ணயம் செய்த போது, தமிழக கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, போக்குவரத்து செலவு ரூ.100 உட்பட மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.2,100 என மாநில பரிந்துரை விலையை அரசு நிர்ணயம் செய்தது. தற்போது, 2012,13ம் ஆண்டிற்கான கரும்பு பருவத்திற்கு, நியாயமான ஆதாய விலையாக மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.1,700 என மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளதையடுத்து, மாநில பரிந்துரை விலையாக, போக்குவரத்து செலவு ரூ.100 உட்பட மெட்ரிக் டன் ஒன்றிற்கு 2,350 ரூபாய் என நிர்ணயம் செய்ய உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

## கேரளாவுக்கு முட்டைகள் கொண்டு செல்ல அனுமதி



செங்கோட்டை : தமிழகத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு சுமார் 25 லட்சம் முதல் 50 லட்சம் முட்டைகள் விற்பனைக்காக தினமும் அனுப்பிவைக்கப்படுகின்றன. நாமக்கல் மாவட்டத்திலிருந்து தினமும் 7 முதல் 14 லாரிகளில் முட்டைகள் கொண்டு செல்லப்படுகின்றன. கடந்த மாதம் 26ம் தேதி பெங்களூருவில் உள்ள மத்திய அரசின் பண்ணையில் பறவைக் காய்ச்சலால் வான்கோழிகள் இறந்ததையடுத்து, கேரள அரசு தமிழகத்திலிருந்து முட்டைகள் அனுப்ப தடை விதித்தது.

இதனால் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை வீழ்ச்சியை கண்டது. இந்நிலை யில் சில நாட்களுக்கு முன்பு முட்டை ஏற்றுமதிக்கு கேரள அரசு அனுமதி வழங்கியது. ஆனால், தமிழக எல்லையான செங்கோட்டை வழியாக கேரளாவுக்கு லாரிகளில் கொண்டு செல்லப்படும் முட்டைகள் ஆரியங்காவு சோதனை சாவடியில் நிறுத்தப்பட்டு கால்நடை மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறையினர் கடுமையாக சோதனையிட்ட பின்னரே கொண்டு செல்ல அனுமதி

வழங்கப்படுகிறது.

காலை 5 மணிக்கு கேரள எல்லைக்குள் வரும் இந்த முட்டை லாரிகள் சோதனை முடிந்து அம்மாநிலத்திற்குள் செல்ல இரவு 10 மணிக்கும் மேலாகி விடுவதாக லாரி டிரைவர்கள் தெரிவிக்கின்றனர். பறவை காய்ச்சல் பீதி காரணமாக தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு நாள்தோறும் 50 லட்சம் முட்டைகள் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 25 லட்சம் முட்டைகளாக குறைந்து விட்டதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**தீவிர காற்றழுத்தம் வலுகுறைந்தது நாளை முதல் மீண்டும் மழை**



சென்னை : வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள தீவிர காற்றழுத்தம் வலுகுறைந்தது. இதனால் தமிழகத்தில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 10ம் தேதி வங்கக் கடலில் ஒரு குறைந்த காற்றழுத்தம் உருவாகி வலுப்பெற்று நேற்று முன்தினம் மாலையில் தீவிர காற்றழுத்தமாக மாறியது. புயலாக மாறும் பட்சத்தில் அது கொல்கத்தா நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி தெற்கு நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. சென்னைக்கு கிழக்கு மற்றும் தென் கிழக்கு திசையில் 700 கிமீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. அதனால் 21ம் தேதி தெற்கு ஆந்திரா மற்றும் வட தமிழகத்தில் மழை பெய்யத் தொடங்கும். வங்கக் கடலில் தற்போது நிலை கொண்டுள்ள அந்த தீவிர காற்றழுத்தம் காரணமாக தீபகற்ப பகுதியில் உள்ள அனைத்து ஈரப்பதமும் உறிஞ்சப்பட்டு வருகிறது. இதனால் தீப கற்ப பகுதியில் கடும் குளிர் அலை நிலவுகிறது. மற்றும் பனி நிலவுகிறது.

இதனால் தமிழகத்தில் எந்த இடத்திலும் இரண்டு நாட்களுக்கு மழை இருக்காது. விசாகப்பட்டினம், சென்னை, புதுச்சேரி, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய துறை முகங்களில் புயல்

கூண்டு 1ம் எண் ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். கடலில் சீற்றம் ஏற்படத் தொடங்கும். மீன் பிடிக்க சென்றவர்கள் கரைக்கு திரும்பவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம்: வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதை தொடர்ந்து பாம்பன் து றைமுகத்தில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.
சென்னையிலிருந்து வடக்கு மற்றும் வடகிழக்கில் வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழக கடலோர பகுதியில் மீனவர்களுக்கு பொதுவான புயல் எச்சரிக்கை செய்யப்பட்டு உள்ளது.

நேற்று காலை பாம்பன் துறைமுக அலுவலகத்தில் ஒன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டு மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. இதனால் மீனவர்கள் நேற்று கடலுக்கு செல்லவில்லை. புயல் எச்சரிக்கை செய்த போதிலும் பாம்பன் கடல் பகுதியில் அதற்கான அறிகுறி எதுவும் இல்லை. ஆனால் ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து நேற்று காலை 600க்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்துறை அனுமதி பெற்று வழக்கம் போல் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். ராமேஸ்வரம் கடல் பகுதியில் புயல் எச்சரிக்கை இல்லாததால் தனுஷ்கோடி, கரையூர், வடகாடு மற்றும் ஓலைக்குடா கடல் பகுதியில் நாட்டுப்படகு மீனவர்களும் வழக்கம் போல் நேற்று காலை மீன்பிடிக்க சென்றனர்.

19th nov 2012 P.M

**குன்னூர் ஏலத்தில் டீத்தூள் விலை உயர்வு**



குன்னூர் : நீலகிரி மாவட்டம், குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் தேயிலை தூள் ஏல விற்பனை நடைபெற்றது. மொத்தம் 13.08 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம்

9.27 லட்சம் கிலோ மற்றும் டஸ்ட் ரகம் 3.81 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் பங்கேற்றனர். இதனால் 97 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது.

அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.2 வரை விலை உயர்ந் தது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.77 முதல் 78, உயர் வகை ரூ.95 முதல் ரூ.125, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.81 முதல் ரூ.83, உயர் வகை ரூ.100 முதல் ரூ.135 வரை விலை போனது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோ ரூ.152, ஆர்தோடக்ஸ் ரகம் ரூ.215ம் விலை கிடைத்தது.

**நடப்பாண்டில் இதுவரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி**



புதுடெல்லி : நடப்பாண்டில் இது வரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக, இஸ்மா வெளியிட்ட அறிக்கை: 2012,13ம் ஆண்டில் நவம்பர் 15ம் தேதி வரை 9.84 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலத்தில் 7.76 டன்னாக இருந்தது. கர்நாடகா மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகரித்ததால் 27 சதவீதம் அதிக சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 15ம் தேதி கணக்கெடுப்பின்படி நாடு முழுவதும் 178 ஆலைகளில் கரும்பு அரவை தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 215 ஆலைகளில் அரவை நடைபெற்றது. உ.பி.யில் 43 ஆலைகளில் 3 ஆலைகளில் மட்டுமே அரவை தொடங்கியுள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் உள்ள 95 ஆலைகளில் 93ல் அரவை தொடங்கி விட்டது. கர்நாடகாவில் 49 ஆலைகளில் (கடந்த

ஆண்டு 48) கரும்பு அரவை நடைபெறுகிறது.

இந்த மாநிலத்தில் மட்டும் இதுவரை 4.2 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது. இது கடந்த ஆண்டு 2.37 லட்சம் டன்னாக இருந்தது. கடந்த 2011,12ல் 2.6 கோடி டன்னாக இருந்த ஒட்டுமொத்த சர்க்கரை உற்பத்தி, நடப்பாண் டில்(2012,13) 8 சதவீதம் குறைந்து 2.4 கோடி டன்னாக இருக்கும். மழை குறைவாக இருந்ததால் கரும்பு விளைச்சல் பரப்பளவு குறைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.